*வாண்மையாளர் பார்வையில்...*

APSL வெளியீட்டுத் தொடர் இல. 1 - **ஊழல்**

ஐக்கிய இராச்சியத்தின், இலங்கை வாண்மையாளர் சங்கம் (APSL - UK)

**அறிமுகம்**

APSL இன் அறிவு இடமாற்ற வேலைத்திட்டத்தின் ஓர் அம்சமாக கல்வியூட்டும் கட்டுரைகள் தயாரித்து பரவலாக வெளியிடப்பட்டுள்ளது. அதன் முதலாவது தலைப்பாக ‘‘ஊழல்’’ ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான பிரச்சினைகளை நவீன சமூகத்தில் கல்வியின் ஊடாக வெற்றிகரமாகக் கையாள முடியும் என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும். அண்மையில் ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற ஒரு APSL நிகழ்வின்போது அதன் அங்கத்தவர்கள் ஊழலுக்கான காரணங்கள், அதன் விளைவுகள், அதனைக் குறைப்பதற்கான அல்லது ஒழிப்பதற்கான வழிவகைகள் பற்றி பரவலாக கலந்துரையாடினர், விவாதித்தனர், கருத்துத் திரட்டினர். கலந்துரையாடிய விடயங்கள் இக்கட்டுரையில் பொழிப்பாக்கப்பட்டுள்ளது. அது இது தொடர்பாகக் கரிசனை காட்டும் நாடுகளில் பிரசுரிக்கப்பட்டு பரவலாக வெளியிடப்படுவதற்குரியதாகும். மேலும் இது இவ்விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கான ஓர் ஆரம்பமாகவும் அமையும்.

இக்கலந்துரையாடலின்போது அதில் பங்குபற்றியோருக்கு Transparency International (TI) இனால் அண்மையில் வெளியிடப்பட்ட தரவுகளையும் உசாவ முடிந்தது.

TI இனால் ஊழலுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் வரவேற்பைப்பெற்றுள்ளது. TI ஆனது 1993 இல் தாபிக்கப்பட்ட ஒரு உலகளாவிய சிவில் அமைப்பாகும். அது ஊழல் தொடர்பான ஆராய்ச்சிகளையும் களவாய்வுகளையும் நடத்தி வருகிறது. TI இனால் ஊழல் புலக்காட்சிச் சுட்டி (Corruption Perception Index - இணைப்பு CPI) வரையறுக்கப்பட்டு, CPI புள்ளிகளின்படி 180 நாடுகடளுள் தர வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த அளவுத்திட்டத்தின்படி CPI - புள்ளி 10 என்பது, மிகக்குறைவான ஊழல் மட்டத்தைக் குறிக்கிறது. CPI புள்ளி 0 என்பது மிக உயர்வான ஊழல் மட்டத்தைக் குறிக்கிறது.




*படம் 1 : CPI புள்ளிகளின்படி வரையப்பட்ட உபசட்டம்: 2006*
*CPI புள்ளி - 10 (இள மஞ்சள் நிறம்) = மிகக்குறைவான ஊழல் மற்றும்*
*CPI புள்ளி - 0 (கருஞ்சிவப்பு நிறம்) = மிக உயர்வான ஊழல்*

2007 இன் CPI புள்ளிகளின்படி தர வரிசைப்படுத்தப்பட்ட சில நாடுகளின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளன.

*அட்டவணை 1: CPI புள்ளிகளின்படி தரவரிசைப்படுத்தப்பட்ட நாடுகளின் பட்டியல் : 2007*[*]

| நாட்டின தரவரிசை | நாடு | CPI புள்ளி | நாட்டின் தரவரிசை | நாடு | CPI புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | நியூசிலாந்து | 9.4 | 61 | கியுபா | 4.2 |
| 2 | டென்மார்க்கு | 9.4 | 75 | இந்தியா | 3.5 |
| 3 | பின்லாந்து | 9.4 | 91 | தாய்லாந்து | 3.3 |
| 4 | சிங்கப்பூர் | 9.3 | - | - | - |
| 5 | சுவீடன் | 9.3 | 95 | இலங்கை | 3.2 |
| - | - | - | - | - | - |
| 10 | கனடா | 8.7 | 110 | எகிப்து | 2.9 |
| 11 | ஒஸ்திரியா | 8.6 | 138 | பாகிஸ்தான் | 2.4 |
| 13 | ஐக்கிய இராச்சியம் | 8.4 | 146 | ரஷ்யா | 2.3 |
| 16 | ஜேர்மன் | 7.8 | 148 | நைஜீரியா | 2.2 |
| 17 | யப்பான் | 7.5 | 151 | கசகஸ்தான் | 2.1 |
| 20 | ஐக்கிய அமெரிக்கா | 7.2 | 162 | பங்காளதேஷ் | 2.0 |
| 43 | மலேசியா | 5.1 | - | - | - |
| 45 | தென்னாபிரிக்கா* | 5.1 | 172 | அப்கானிஸ்தான்** | 1.8 |
| 57 | நமீபியா* | 4.5 | 178 | ஈராக்** | 1.5 |
| 58 | சீசெல்ஸ்* | 4.5 | 179 | சோமாலியா** | 1.4 |

மேற்படி விரிவான ஆய்வைக்கொண்ட சில தெளிவான முடிவுகளை மேற்கொள்ளலாம்.

(அ) உலகில் பெருந்தொகையான நாடுகள் ஊழலினால் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி யுள்ளது. ஊழல் குறைந்த நாடுகள் பொருளாதார ரீதியில் விருத்தியடைந்த, உள்நாட்டு முரண்பாடுகள் அற்ற நாடுகளாகும். ஊழல் மிகுந்த நாடுகள் வறியவை. நாட்டினுள் பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டவை. எனவே பொருளாதார அபிவிருத்திக்கும் ஊழலுக்கும் இடையே வலிமையான இணைவு காணப்படுகின்றன.

(ஆ) முரண்பாடுகள் காரணமாக, சீர்குலைந்துள்ள நாடுகளில் (உதாரணம்: ஆப்கானிஸ்தான், ஈராக், சோமாலியா) ஊழல் மிக்கவையாக உள்ளன. நிர்வகிக்கும் அமைப்புக்கள் சரியாகத் தொழிற்படுவதில்லை. எனவே ஊழலுக்குப் பொருத்தமான சூழ்நிலை அங்கு காணப்படுகின்றது.

(இ) ஊழலுக்கு எதிராக அண்மைக்காலத்தில் ஆபிரிக்காவில் (உதாரணம்: தென்னாபிரிக்கா, நமீபியா, சீசெல்ஸ்) மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அந்நாடுகளின் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமையை அவை பெற்றுள்ள உயர்வான CPI புள்ளிகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. அது ஊழலின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ள ஏனைய நாடுகளுக்கு நல்ல உதாரணமாகும். அந்நாடுகள் பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்காகவும், வறுமையைப் போக்குவதற்காகவும் ஊழலைக் குறைப்பதற்காக உடனடியாகப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நடத்தப்பட்ட கருத்துத்திரட்டல் கலந்துரையாடல் அமர்வின்போது ஊழலுக்கான காரணங்களும் அதன் விளைவுகளும் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்பட்டன. மேலும் சமூகத்தின் வழக்க நிலையை மேம்படுத்துவதற்காக ஊழலைத் தவிர்ப்பதற்கும், இயன்ற அளவுக்குக் குறைப்பதற்கும் அதிகாரத்துவமுடையோர் மேற்கொள்ளல் வேண்டுமேன விததந்துரைக்கப்படும் பொதுவான நடவடிக்கைகளும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன.

## 2.0 ஊழலுக்கான காரணங்கள்

**‘‘தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை சொந்த நன்மைக்காக தவறாகப் பயன்படுத்தல்’’** என்பது ஊழல் என்தபற்கு TI இனால் வழங்கப்படுடுள்ள வரைவிலக்கணமாகும்.
கருத்துத்திரட்டல் அமர்வின்போது ஒரு குழுவினால் ஊழலுக்கான காரணங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

அரச துறையில் தொழில் புரிவோரின் சம்பளங்கள் சார்பளவில் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை அக்காரணங்களுள் பிரதானமாகும். இதன் விளைவாக அவர்கள் தமது வாழ்க்கைத் தரத்தை (வீடு, பிள்ளைகள்னி கல்வி...) மேம்படுத்துவதற்காக இலஞ்சம் வாங்குகின்றனர். வறுமையானது ஊழலை அதிகரிக்கின்றது எனத் தோன்றியபோதிலும், ஊழலுக்கு முக்கிய காரணம் மனிதனின் பேராசையாகும். வறிய சமூகங்களில் நேர்மையானோர் பலர் காணப்படுகின்றனர். அவர்கள் தமது சமூகத்தில் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ்கின்றனர். உண்மையில் வறுமையானது ஊழலை அதிகரித்து, அடித்தளக் கட்டமைப்பைச் சீர்குலைத்து ஒழுக்க விழுமிய, பண்பாட்டுப் பெறுமானங்களையும் சீர்குலைக்கின்றது.

சட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் ஊழலுக்கு மற்றுமொரு காரணமாகும். இவ்வாறான சூழ்நிலையில் தனியாட்களும் நிறுவனங்களும் அரசும் ஊழலில் ஈடுபடும் நிலை ஏற்படும். சிறிது காலத்தில் இந்த துர்ச்செயல்கள் செயன்முறையில் உள்வாங்கப்பட்டுவிடும். எனவே தொகுதியில் வெளிப்படையான தன்மை அற்றுப்போகும். ஊழல் பற்றிக் குரல் கொடுப்போருக்குப் பாதுகாப்பு அற்றுப்போகும். ஊழல் சமுதாயத்தில் மேலும் வேரூன்றும். இதன் விளைவாக ஊழல் நிலுவமைப்படுத்தப்பட்டுவிடும். நேர்மையானவர்கள் கூட தமது வேலைகளைச் செய்வித்துக் கொள்வதற்காக இலஞ்சம் கொடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர்.

சகல மட்டங்களில் ஊழலில் ஈடுபடும் தலைமைத்துவம், சமுதாயக் கட்டமைப்பு, சீர்குலைவு, பொருளாதாரம் ஆகியனவே ஊழலுக்குப் பிரதானமான காரணங்களாகும்.

## 3.0 ஊழலின் விளைவுகள்

நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் சமூக வளர்ச்சியையும் பின்னடையச் செய்தல், ஏழை மக்களை வறுமையின் பிடியில் சிக்கவைத்தல் ஆகியவை ஊழலின் பிரதானமான விளைவுகளாகும். அதன் தாக்கங்களுக்கு ஆளாகத்தக்கதாக (பெண்கள், சிறுவர்கள், முதியோர், நோயாளர் உட்பட) பாதிப்புக்களுக்கு உள்ளாவர். கூடவே சமூகத்தில் ஒரு சிறு பிரிவினர் எண்ணிப்பார்க்க முடியாத அளவு சுகபோகங்களையும் வாழ்க்கைச் கோலங்களையும் அனுபவிப்பர்.

நீண்ட கால ரீதியில் இந்த உதவியற்ற தன்மையானது தேசியக் கட்டமைப்பை வலுவிழக்கச் செய்துவிடும். ஊழல் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களாக மாறிவிடும். ஒழுக்க விழுமியங்கள் பாதிக்கப்படும். இதன் விளைவாக பல பாரதூரமான விளைவுகள் ஏற்படும். ஒழுக்க விழுமியக்குறைவு, நிறுவனத்தின்/சமூகத்தின் நம்பகத்தன்மை குறைவடைதல், நாட்டின் மதிப்பு குறைவடைதல், வினைத்திறன் குறைவடைதல், சமவாய்ப்புக் கிடைக்காமற்போதல், கூடவே மூளைசாலிகளின் வெளியேற்றம் போன்ற அவ்வாறான சில பாரதூரமான விளைவு களாகும்.

சூழலின் மீதும் சமூகத்தின் மீதும் இது ஏற்படுத்தும் தாக்கம் மிக மிக அதிகமானதும். அத்தாக்கம் நீண்டகால ரீதியில் பாதிப்புக்களை ஏற்படுத்தும். உதாரணமாக, ஊழல் மிகுந்த சமூகத்தில் அதிகாரத்தைத் தவறான வகையில் பிரயோகித்தலானது எதிர்கால சமுதாயத்தின் மீது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். ஊழலானது முக்கியமான செயன்முறைகளைத் தாமதப்படுத்தும். அதன் விளைவாக, எதேச்சாதிகாரம் தலைத்தோங்கும். அரசாங்க நிறுவனங் களில் செலவுகள் மிக அதிகரிக்கும். தேசிய அனர்த்தத்தின்போது வெளிநாட்டு உதவிகள் முறையீனமாகப் பயன்படுத்தப்படும்.

சட்டத்துறையின் இறைமை சீர்குலையும். இதன் விளைவாக பொலிசு, சுங்கம், ஏற்றுமதி/இறக்குமதிகள் போன்றவற்றில் ஊழல் அதிகரிக்கும். அதனால், நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான வரி வருமானம் குறைவடையும். இறுதியில் பொது மக்களே பெரும் பாதிப்புக்கு உள்ளாவர்.

## 4.0 ஊழலைக் குறைப்பதற்கான/இழிவாக்குவதற்கான விதந்துரைப்புக்கள்

ஊழலானது சமூக அபிவிருத்தியில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும். எனவே ஊழலை ஒழிப்பதற்கான பின்வரும் வழிமுறைகள் விரிவான வகையில் முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.

1. நாட்டில் சகல பகுதிகளிலும் நிலையாக உயர்தரமான பாடசாலைகளையும்/கல்வியையும் விருத்திசெய்து பேணி வருதல். நாட்டினதும் தனியாட்களினதும் அபிவிருத்தித் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு வேலைத்திட்டத்தை மாற்றியமைத்தல்.

2. ஊழலைக் குறைப்பதற்கான சரியான தகவல்கள், முறைகள் மற்றும் வழிவகைகள் பற்றி பொது மக்களுக்கு அறிவூட்டல் செய்தல். ஊழலைக் குறைப்பதற்கான முன்மாதிரியாக அமையத்தக்க தனியாள்கள் உருவாகும் வகையிலான பண்பாட்டை விருத்தி செய்தல்.

3. குறுகியகால தனிப்பட்ட நன்மைகளுக்காகவல்லாது நாட்டின் நன்மைக்காக வாக்களிக்கத்தக்க வாறு மக்களுக்கு அறிவூட்டல் செய்து வலுவூட்டல். சனநாயக முறையினூடாக நேர்மையான ஒருமைப்பாடுடைய தலைவர்களைத் தெரிவுசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் மக்களிடையே நாட்டுப்பற்றை விருத்தி செய்தல்.

4. வளர்முக நாடுகளில் உறுதியான நிறுவன அடித்தளங்களை வலுவூட்டல்; சமுதாய நிகழ்ச்சித்திட்டங்களில் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தலையும் ஊழல் தவிர்த்தலையும் உள்ளடக்குதல்.

5. சட்டத்தைடயும் ஒழுங்கையும் பேணுவதற்கான, மாசற்ற தகமைமிக்க சட்டத்துறையைத் தாபித்தல். சட்டத்துறை நடவடிக்கைகள், அரசியல் தலையீடு அற்றதாகவும் சுயாதீனமான தாகவும் அமைதல் வேண்டும். பணம், பொருள், அதிகாரம் என்பவற்றைக் கருத்திற்கொள்வது சட்டதிட்டங்கள் அனைவர் மீதும் சமமாகப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

6. நியமங்களையும் வழிவகைகளையும் வகுப்பதற்கான அரசதுறை, வணிகத்துறை மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள், கூட்டாகச் செயற்படுதல் வேண்டும். மேலும் ஒவ்வொரு துறையிலும் இவை உயர்தர ஒழுக்கத்துடன் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

7. ஒவ்வொரு நிருவாகத் தீர்மானத்திலும் வணிகக் கொடுக்கல் வாங்கலிலும், அறச் செயற்பாடு களிலும் வெளிப்படைத் தன்மை மேம்படுத்தப்படுதல் வேண்டும். சிவில் உத்தியோகத்தர்கள். முகாமையாளர்கள், நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் செயற்பாடுகள், வெளிப்படைத்தன்மை யுடையவையாகவும், எதிர்வுகூறக் கூடியனவாகவும், விளங்கிக்கொள்ளக் கூடியனவாகவும் இருத்தல் வேண்டும்.
8. வழக்குகளைச் சுயாதீனமாக நுணுகியாய்வதற்கான முழுமையான அதிகாரத்தை வழங்கும் வகையில் ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பான பொறிமுறைகளைத் கொள்கைகளைத் (உதாரணம்: இலஞ்ச ஆணைக்குழு) தாபித்தல். ஒவ்வொருவரையும் தமது செயல்களுக்கு வகை சொல்லல். உடனடியாகத் துலங்குவதை உறதிப்படுத்தும் கொள்கையை வகுத்தல்.

9. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள், தமது நிதிகள் நிறுவனங்களின் மீது இறுக்கமான விதிமுறைகளைப் பிரயோகித்தல் வேண்டும். இது கறுப்புப்பணப் பரிமாற்றத்தைக் குறைக்கும், ஊழல் மிகுந்த நாடுகளில் வறிய மக்களின் பொதுநிதி திருட்டப்படுவதைக் குறைக்கும்.

10. தனியார் மற்றும் அரச துறைகளில் சகல அதிகார முறைமைகளிலும் தகுதியானவருக்கு உரிய இடம் கிடைப்பதை ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் ஊழல் காணப்படுவதோடு அது அதிகரித்த வண்ணமுள்ளது. எனவே, இலங்கையை ஊழலிலிருந்து மீட்டெடுப்பதற்கான இலங்கைச் சமுதாயம் விழித்தெழுந்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**உசாத்துணைகள்**


1. Notes; from brainstorming sessions of APSL members in Wakefield Event, 22 November 2008.
2. Numerous reports published by TI; http; //www.transparency.org
3. Using communication Approaches and Techniques to support Anti-corruption efforts: A Learning Event for Anti-Corruption Agencies Veienna, Austria, November 17 – 19, 2008 http://siteresources.worldbank.org/EXTGOVACC/Resources/SAMsdialogueFINAL.pdf
4. UNODC The United Nations Convention against corruption. http://www.unodc.org/documents/treaties/UNCAC/Publications/Convention/08-50026_E.pdf


APSL Website: www.apsl.org.uk
APSL வெளியீட்டுத்தொடர்: No.2 : Discipline on the Roads.